

மக்கள் விசாரணை
ஆண்டு-6 இதழ்-3 ஆகஸ்ட்-2017 மாத இதழ் விலை ₹10/-
பெண்களை அலறவைக்கும்
குண்டாஸ்



ஒன்று சேர்வோம்..!
ஒதுக்குவோம் பகைமையை..!
ஒருமித்த இலக்கோடு
உருவாக்குவோம்
வளமான இந்தியாவை..!
நினைவில் கொள்வோம்
இன்றைய நம் சுதந்திர சாவசம்..!
அன்றைய
நம் சுதந்திர போராட்ட வீரர்களின்
தன்னலமற்ற தியாகம்..!
நாளைய இந்தியா
நலமாய் நம்கையில்..!
சுதந்திர தின
நல்வாழ்த்துக்கள்...
Happy
Independence Day
R.R.சண்முகவேல்
PMR HOMES PVT LTD.,
Gemini Parsn Cimmercial Complex,
Anna Salai, Chennai - 600 006

சிறப்புத் தலையங்கம்

# இனி தமிழன் என்று சொல்லப்போவதில்லை!

தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆட்சி காலம் முடிந்து ஓராண்டுக்கு மேல் ஆகிவிட்டது. இந்த அமைப்புகளுக்கு இதுவரை தேர்தல் நடத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இடையில் உள்ளாட்சி தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் இடஒதுக்கீடு முறையை முறையாக பின்பற்றவில்லை என்று நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இதை தொடர்ந்து இடஒதுக்கீட்டை சீரமைத்து விட்டு தேர்தல் நடத்த வேண்டும் என்று நீதிமன்றம் தடை விதித்தது. இடஒதுக்கீடு தொடர்பாக அனைத்து மனுக்களையும் பெற்று அதன் அடிப்படையில் மாநில அரசு அறிக்கை தயாரித்து வழங்கியுள்ளது. இந்நிலையில், தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றம், ஆளும் கட்சியின் சின்னம் முடக்கம், உட்கட்சி பூசல், ஸ்திர தன்மையின்மை ஆகியவற்றால் உள்ளாட்சி அமைப்புக்கு தேர்தல் நடத்துவதில் அரசு முனைப்பு காட்டவில்லை. உள்ளாட்சி தேர்தலை உடனே நடத்த உத்தரவிடக்கோரி திமுக உள்ளிட்ட கட்சிகள் உயர்நீதிமன்றத்தை அணுகியது.

இவர்களின் மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் கடந்த மே மாதத்துக்குள் தேர்தலை நடத்த உத்தரவிட்டது. அதன்படி மாநில தேர்தல் ஆணையம் ஜூலை மாதத்துக்குள் தேர்தலை நடத்த தயாராக இருப்பதாக நீதிமன்றத்தில் அறிவித்தது. ஆனால் உள்ளாட்சி தேர்தலை நடத்தும் எண்ணமே அரசுக்கு இருப்பதாக தெரியவில்லை. அவர்கள் தேர்தலை நடத்தாமல் காலம் கடத்து வதற்கான காரணம் உள்ளங்கை நெல்லிக்கனி போல் அனைவருக்கும் தெரிந்துள்ளது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் இல்லாததால், கிராமப்புறங் களிலும், நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் வளர்ச்சி பணிகள் ஸ்தம்பித்துள்ளன. கழிவுநீர் கால்வாய், சாலை வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு, மேல் தேக்க நீர் தொட்டி அமைத்தல் உள்ளிட்ட அடிப்படை பணிகள் எதுவும் நடக்காமல் மக்கள் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர். தங்கள் தேவைகளுக்கு யார் மூலம் தீர்வு காண்பது என்ற குழப்பத்தில் தவித்து வருகின்றனர்.

மாநில அரசு தனது சுயநலத்துக்காக தேர்தலை நடத்தாமல் காலம் தாழ்த்தி வருவதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள். அனைத்து மாவட்டங்களிலும் ஆய்வு நடத்தி தேர்தல் பணிகளை மேற்கொள்ள தயார் நிலையில் இருப்பதாக மாநில தேர்தல் ஆணையம் கூறுகிறது. இந்நிலையில் ஆகஸ்ட் 31ம் தேதிக்குள் உள்ளாட்சி தேர்தலை நடத்த வேண்டும் என்று மீண்டும் உயர்நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சட்ட சபை கூட்டத் தொடரில் கடும் குடிநீர் பஞ்சத்தைப் பற்றி பேசவே இல்லை. கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு என வெகுஜன மக்களின் அடிப்படை தன்மையில் கூட விவாதம் நடைபெறவில்லை. 110-ன் விதியின்படியாவது அறிவிப்புகள் வரும் என்று எதிர்பார்த்த வேளையில் ஏமாற்றம்தான் மிஞ்சியது.

டெல்டா விவசாயிகள் மற்றும் கதிராமங்கலம் மக்கள் 150 நாட்களும் மேலாக போராடி வருகின்றனர். அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், அரசு அதிகாரிகளிடம் கோடிக்கணக்கில் லஞ்சமும், ஊழலும் கரை புறண் டோடுகிறது. இந்த நிலையில் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோல் எம்.எல்.ஏக்களின் மாதம் ஊதியத்தை உயர்த்தியுள்ளார்கள். வீரமிக்க, கண்ணியமிக்க சத்திய பூமியான தமிழ்நாட்டின் மைந்தன் என்று சொல்வதில் கர்வப்பட்ட காலம் முடிவுக்கு வந்துவிட்டது. இனி தமிழன் என்று சொல்லப் போவதில்லை. இதை நான் மட்டுமல்ல நீதிமன்றம் ஒவ்வொரு முறை சுட்டிக்காட்டியது.

மாநில அரசு ஏதோ ஒரு காரணத்தை கூறி தப்பித்து கொள்வதுமாகவே காலம் வீணாகி கொண்டி ருக்கிறது. மக்கள் நலனில் அக்கறை கொண்ட அரசாக இருந்தால் நீதிமன்ற வழிகாட்டுதலுக்காவது செவிசாய்த்து உடனடியாக உள்ளாட்சி தேர்தலை நடத்தி நல்லாட்சி மேற்கொள்ள வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

– ஆசிரியர்


இனிய சுதந்திர தின வாழ்த்துகள்..!
உலகின் மிக பெரிய
ஜனநாயக நாடு..!
மிகச் சிறந்த
அறிவாளிகளைக்
கொண்டுள்ள நாடு..!
எந்த நாட்டவராலும்
நிராகரிக்க முடியாத
இளைஞர்களைக்
கொண்ட நாடு..!
அடுத்த நாட்டின்
நிலங்களின் மேல்
ஆசைப்படாத நாடு..!
தன் நிலத்தை
அபகரித்தாலும்
பொறுத்துக் கொள்ளும்
தியாக நாடு..!
நம் பாரத நாடு..!
S.சரவணன்
மாநில அவைத் தலைவர்,
தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்




சேலம் ரிப்போர்ட்

# சாலையில்லா கிராமம்

சேலம் மாவட்டம் மற்றும் ஏற்காடு வட்டம்வேலூர்பஞ்சாயத்திற்குஉட்பட சோனப்பாடி கிராமத்தில் *120* குடும்பங்கள் வசித்து வருகின்றனர். நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்து *70* ஆண்டுகள் ஆன போதிலும் கிரா மத்தில் கொண்டயனூர் முதல் சொனப்பாடி வரை *3* கி.மீ. எந்த ஒரு அடிப்படை வசதிகளும் இல்லாமல் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

ஊர் பொதுமக்களிடம் நமது நிருபர்கள் கேட்டபோது “எங்கள் சொனப்பாடியில், ஊராட்சி மன்ற தொடக்கப்பள்ளி உள்ளது. எங்கள் கிராமத்தில் உயர் நிலைப் பள்ளி வேண்டுமென்று கேட்டோம். நாங்கள் ரேசன் பொருட்கள் வாங்க சென்றால் *6* கி.மீ. தூரம் கரடு முரடான ஒத்தையடிப் பாதையில் நடந்து சென்று தலைசுமையாக பொருட்களை தூக்கிய நிலையில் தான் இருக்கின்றோம்.

மேலும் சாலை வசதி இல்லாத காரணத் தால் ஊர் பொதுமக்களுக்கு திடீரென நோய் ஏற்பட்டாலோ அல்லது கர்ப்பிணி பெண்களுக்கு பிரசவ வலி ஏற்பட் டாலோ தொட்டியில் தோணிகட்டி அதில் முன் பக்கம் இருவரும் பின்பக்கம் இருவரும் தூக்கி செல்கிறோம்.

இப்படிச் செல்லும் வழியில் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பாதி வழியில் இறந்து விடுகின்றனர். சாலை அமைத்து தரும்பட்சத்தில் பேருந்துகள் மற்றும் வாகனங்கள் உதவியால் உயிர்களை காக்க இயலும். இதை குறித்து இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மனு மற்றும் நேரிலும் சென்று கூறினோம். இதுசம்பந்தமாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

*23–10–2013* அன்ற நடைபெற்ற இடைத் தேர்தலை கிராம மக்கள் ஒன்றுக்கூடி தேர்தலை புறக்கணிப்பதாக முடிவு எடுத்தோம். அதிகாரி கள் அடிப்படை வசதிகளை செய்து தருகிறோம். எதுவும் செய்து தரவில்லை மற்ற கிராமங்களை மேம்படுத்திக் கொண்டு வரும் நமது தமிழக அரசு எங்களது கிராமத்தையும் சீர் செய்து தார் சாலை அமைத்து தருவார்கள் என்று கிராம மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

– ராம்குமார்







# தொடரும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள்



முதன்முதலில் வாச்சாத்தி கிராமத்துக்கு நாங்கள் சென்றது 1992, ஜுலை 14 அன்று. 25 ஆண்டுகள் முடிவடைந்திருக்கின்றன! பேச்சில்லாத கிராமமாகத்தான் அப்போது இருந்தது வாச்சாத்தி. வருவாய்த் துறை ஆவணங்களில் மனிதர்கள் வாழாத கிராமத்தை இப்படித்தான் குறிப்பிட்டிருப்பார்களாம். ஆம்! எந்த ஜீவராசிகளும் அந்த ஊரில் இல்லை. எல்லாம் அழிக்கப்பட்டிருந்தன. வீடு, வீட்டில் இருந்த பொருட்கள், வளர்த்த ஆடு, மாடு, கோழி, நாய்கள் என எல்லாம்! மனிதர்கள்? சிக்கியவர்கள் சிறையில், மற்றவர்கள் மலையில்! தண்ணீர் பயன்படுத்த முடியாத அளவுக்கு அசுத்தப்படுத்தப்பட்டிருந்தது. இப்படி ஒரு கொடுமையை அதற்கு முன் நான் வாழ்நாளில் பார்த்ததில்லை.

இப்படியொரு கிராமத்தையே சூறையாடியது, வீடுகளை நொறுக்கியது, ஆடு, கோழிகளைச் சுட்டுத் தின்றது. அதன் கழிவுகளைக் கிணறுகளில் போட்டுத் தண்ணீரை அசுத்தப்படுத்தியது என எல்லாக் கொடுமைகளையும் செய்தது அரசின் கட்டுப்பாட்டில் உள்ள காவல் துறை, வனத்துறை, வருவாய்த்துறையைச்சேர்ந்த அதிகாரிகள், ஊழியர்கள் என்பது அன்று நம்ப முடியாததாக இருந்தது. நேரில் சென்று பார்க்காத யாரும் நம்பியிருக்க மாட்டார்கள்தான். அப்போது பொதுநல வழக்குகளைக் கவனித்து வந்த உயர்நீதிமன்ற நீதிபதி பத்மினி ஜேசுதுரையும் நம்பவில்லை. படித்தவர்கள், அரசுப் பணியில் உள்ள உயர் அதிகாரிகள் இது போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டிருப்பார்கள் என்பது நம்பத் தகுந்ததாக இல்லை என்று கூறி, தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்தின் சார்பில் போடப்பட்ட பொதுநல வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார். பிறகுதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அப்போதைய மாநிலச் செயலாளர் ஏ. நல்லசிவனின் பெயரில் உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தோம்.

அப்போது ஏ.நல்லசிவன் மாநிலங்களவை உறுப்பினராகவும் இருந்தார். 1992 ஆகஸ்ட் 5 அன்று நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினையை எழுப்பியிருந்தார். இந்த நிலையில்தான், வழக்கை ஏற்று உச்ச நீதிமன்றம், எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக விசாரிக்க வேண்டுமென்று சென்னை உயர் நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டது. இப்படி உத்தரவு போட்டது 1992 செப்டம்பர் 8-ம் தேதி. ஆனால், வழக்கில் தருமபுரி மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்தது 2011 செப்டம்பர் 29. அதாவது 19 ஆண்டுகள் கழித்து தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமம் என்று காலங்காலமாகச் சொல்லப்பட்டுவருகிறது. ஆனால், அதில் மாற்றத்தை ஏற்படுத்த நீதித்துறையைச் சேர்ந்தவர்கள் உட்பட எவரொருவரும் தயாராக இல்லை என்பதுதான் இப்போது வரை உள்ள நிலை. அதற்கு உதாரணமாக பல நூறு வழக்குகள் இன்றும் நடைபெற்றுவருகின்றன என்பதை நாமறிவோம்!

இதற்கு இடைப்பட்ட காலத்தில் ஆளும் அதிமுக மொத்தத்தையும் மூடி மறைத்தது. பிறகு, ஆட்சிக்கு வந்த திமுகவும் வாச்சாத்தி

வழக்கைக் கண்டுகொள்ளாமல் மௌனம் சாதித்தது. நீதியை நிலைநாட்டவும், குற்றவாளிகளுக்குத் தண்டனையும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும் பெற்றுத்தர நடத்திய போராட்டங்கள், நீதிமன்ற நடவடிக்கைகள் போன்றவற்றைப் பற்றி எழுதினால் பெரும் காவியமாகும். வாச்சாத்தி வன்கொடுமையை எதிர்த்த போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் உந்துவிசையாக விளங்கியவர் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் அப்போதைய மாநிலப் பொதுச் செயலாளர் கே. வரதராஜன் என்பது குறிப்பிடத்தக்கது.

வாச்சாத்தி பழங்குடி மக்கள்மீது அந்தக் கொடுமை நடந்ததோ 1992 ஜூன் 20, 21, 22 ஆகிய மூன்று நாட்களும். நாங்கள் சென்றதோ ஜூலை 14-ம் தேதி. இடையில் 20 நாட்களுக்கு மேலாக அங்கு நடந்த தாக்குதல்கள், கொடுமைகள் குறித்து வெளி உலகத்துக்கே தெரியாமல் மூடி மறைக்கப்பட்டிருந்தது என்பது அதிர்ச்சி அளிக்கக்கூடிய உண்மை.

பிறகு, எங்களுக்கு மட்டும் எப்படித் தெரிய வந்தது என்று எல்லோரும் இப்போதும் கேட்கிறார்கள். ‘தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம்’ என்ற அமைப்பை உருவாக்குவதற்காக மலைகள் தோறும் மாநாடுகளை நடத்திக் கொண்டிருந்தோம். அப்படி ஒரு மாநாடு தருமபுரி மாவட்டம் சித்தேரி மலையில் 1992 ஜூலை 7-ம் தேதி நடத்தப்பட்டது. அந்த மாநாட்டில், அப்போது சங்கத்தின் மாநிலத் தலைவராக இருந்த கே. பாஷாஜான், மாநிலத் துணைச் செயலாளராக இருந்த என். கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவரும் பங்கேற்றனர். நூற்றுக்கும் மேற்பட்ட ஆதிவாசிகளும் கலந்துகொண்டனர்.

ஆதிவாசி மக்கள்மீது வனத் துறையினர் நிகழ்த்தும் கொடுமைகள் குறித்தும், அதை எதிர்த்துப் போராட வேண்டியதன் அவசியம் குறித்தும் லைவர்கள் பேசியுள்ளனர். அதைக் கேட்டு, நம்பிக்கை பெற்ற வாச்சாத்தியைச் சேர்ந்த இரண்டு பேர், வாச்சாத்தியில் நடந்த கொடுமைகளையெல்லாம் அந்த மாநாட்டில் சுருக்கமாக எடுத்துக் கூறியுள்ளனர். இதுதான் வாச்சாத்தி வன்கொடுமை வழக்கின் தொடக்கப் புள்ளி.

மாநாடு முடிந்த பிறகு அந்த நால்வரிடமும், நடந்த விவரம் முழுவதையும் தலைவர்கள் தனியாகக் கேட்டறிந்தனர். கட்டாயம் உதவுகிறோம் என்று அவர்களுக்கு தைரியத்தையும் தன்னம்பிக்கையும் அளித்துள்ளனர். அப்போது நான் கொல்லிமலையில் இருந்தேன். தொலைபேசி வசதியெல்லாம் இல்லை. எனவே, 9-ம் தேதி நேரில் வந்து என்.கிருஷ்ணமூர்த்தி மேற்கண்ட




விவரங்களை என்னிடத்தில் தெரிவித்தார். மறுநாள் நாங்கள் மூவரும் கள்ளக்குறிச்சியில் சந்தித்துப் பேசினோம். பாஷாஜான் அப்போது கள்ளக்குறிச்சி அருகிலுள்ள கிராமத்தில் வாழ்ந்துவந்தார். ஜூலை 13-ம் தேதி அரூரில் ஒரு ஆர்ப்பாட்டம் நடத்துவதென்றும், பிறகு கிராமத்துக்கு நேரில் செல்வதென்றும் முடிவெடுத்தோம். ஆர்ப்பாட்டத்தின் முடிவில் வட்டாட்சியரைச் சந்தித்து புகார் மனு ஒன்றை அளித்தோம். எதையும் காட்டிக்கொள்ளாமல் அவர் மனுவைப் பெற்றுக்கொண்டார். அவர் முன்னிலையில்தான் அத்தனை கொடுமைகளும் நடந்துள்ளன என்பதைப் பின்னர் தெரிந்து கொண்டோம்.


மறுநாள் ஜூலை 14-ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நாங்கள் வாச்சாத்தி கிராமத்தை அடைந்தோம். அதில், கே.பாஷா ஜான், என். கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் எம். அண்ணாமலை, சித்தேரி மலை தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கச் செயலாளர் ஏ. பொன்னுசாமி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரூர் வட்டச் செயலாள ராக அப்போது செயல்பட்டுவந்த சி. விசுவ நாதன், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் வட்டச் செயலாளராகச் செயல்பட்டுவந்த எச்.ஆர். கணேசன், கூடவே நான் உட்பட ஏழு பேர். இந்தக் குழுதான் முதன்முதலில் வாச்சாத்திக்குச் சென்றது.

வனத் துறையினரால் இளம் பெண்கள் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்ட கொடுமையை அன்றுதான் நாங்கள் கேட்டுப் பேரதிர்ச்சிக்கு உள்ளானோம். அன்று மாலை சேலம் பெண்கள் சிறையில் நாங்கள் சந்தித்த வார்டனும் அதை உறுதிசெய்தார். என்னுடன் வந்தவர்களில் பாஷாஜான், அண்ணாமலை, பொன்னுசாமி, கணேசன் ஆகியோர் மறைந்து விட்டனர். இப்போது வழக்கு, தண்டனை பெற்ற குற்றவாளிகளால் மேல்முறையீடு செய்யப்பட்டு மீண்டும் உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

பழங்குடியினர்தானே, பேச்சற்றவர்கள் தானே என்று காலம்காலமாக அதிகாரத் தரப்பினர் கொடுமைகள் நிகழ்த்திக்கொண்டி ருந்தனர். அவை யாவும் இனியும் தொடர முடி யாது என்பதற்கான நம்பிக்கையைத் தந்ததுதான் வாச்சாத்தி வழக்குக்கான எங்கள் போராட்டம். பழங்குடியினர் மீதான அத்துமீறல்கள் ஓயும் வரை எங்கள் போராட்டமும் ஓயாது!

– வடிவேல்




இனிய சுதந்திர
தின வாழ்த்துகள்..!
நம் நாடு
உலகின் உயர்ந்தது என
உறுதியாய் நம்புவோம்..!
நாட்டைச் சுரண்டும்
தீய சக்திகளை
அடையாளம் கண்டு
அப்புறப்படுத்துவோம்..!
நாட்டின் வளர்ச்சிக்கு
உழைப்போரை
போற்றுவோம்..!
M. சத்தியராஜ்
தலைவர்
M. திருநாவுக்கரசு
செயலாளர்
M. சிராஜுதீன்
பொருளாளர்
தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம், நாமக்கல் மாவட்டம்






# பரவி வரும் டெங்கு...

## பீதியில் மக்கள்

தருமபுரி மாவட்டத்தில் தொடர்ந்து ஒரு மாத காலமாக மக்கள் காய்ச்சலால் அவதிப்பட்டு வருகின்றனர். தொடர்ந்து வாந்தி, மயக்கம், குமட்டல், ஜுரம், உடல்வலி போன்ற தொடர் இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

டெங்கு என்பது கொசுக்கடி மூலம் பரவும் ஒரு வைரஸ் நோய். இது பெரும்பாலும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்களையே தாக்குகிறது. இதன்மூலம் அதிக காய்ச்சல், உடம்பு வலி, தசை வலி, வாந்தி, மயக்கம் அது மட்டுமல்லாமல் இரத்த கழிவுகளையும் ஏற்படுத்தும்.

**பரவும் விதம் :** ஏ.டி.எஸ். என்னும் கொசு பகலில் கடிக்கும் இதன்மூலம் வைரஸ் புரவுகிறது. இந்த ஏடிஎஸ் கொசுவானது. ஒருவரை கடித்து பின் அவரிடம் உள்ள வைரஸை எடுத்து மற்ற வர்களுக்கு பரப்புகிறது. இந்த கொசுவானது வீடு மற்றும் சுற்றுப்புற சூழ்நிலைகளில் உள்ள நீரில் அதிகமாக பதுங்கி இருக்கும். இந்த கொசுவானது அதிகமாக மழைக் காலங்களில் இனப்பெருக்கம் செய்யும். மழை இல்லாத காலங்களில் தேங்காய் மட்டைகள், டயர்கள், பிளாஸ்டிக் பைகள், தண்ணீர் தேங்கும் சுத்தமான இடங்களில் அதிகமாக உற்பத்தியாகி வருகிறது.


**அறிகுறிகள் :** குளிர், ஜுரம், தலைவலி, கண் வலி, வாந்தி, தலைச்சுற்றல் போன்ற அறிகுறிகளைக் காணலாம்.

**டெங்கு சிகிச்சை முறை :** போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் மக்கள் கடும் அவதிக்கு ஆளாகி வருகின்றனர். அதுமட்டுமல்லாமல் தனியார் மருத்துவமனைகளில் கூட்டம் அலை மோதி வருகிறது. இதன்மூலம் பெரும்பாலான மருத்துவமனைகள் இதன்மூலம் அதிக லாபம் பெற்று வருகின்றனர். ஆனால் போதிய சிகிச்சை அளிக்கப்படுவதில்லை.

இதற்கு நிலவேம்பு குடிநீர் மற்றும் போதிய நீர் ஆகாரங்களை எடுத்து வந்தாலே இதனை கட்டுப்படுத்தலாம். மேலும் சுற்றுப் புறத்தை தூய்மையாக வைத்திருந்தாலே போதுமானது. மற்றும் கொசு பரவாமலும், கடிக்காமலும் பாதுகாக்க வேண்டும்.

ஆனால் நமது அரசு மருத்துவமனைகளில் போதிய வசதி இல்லாத காரணத்தினால் மேலும் மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாகி வருகின்ற னர். அது மட்டுமில்லாமல் மருத:துவமனை வளாகங்களிலும் சுத்தமற்ற நிலை உள்ளது. இதன்மூலம் கொசு பரவி வருகின்றது. மேலும் மருத்துவ மனையைச் சுற்றி உள்ள சுற்றுப்புற





சூழ்நிலையும் கூட ஆங்காங்கே குப்பை மற்றும் கழிவு நீர் தேங்கிய வண்ணம் உள்ளது.

இதுபற்றி பொதுமக்கள் கூறுகையில்...

மருத்துவமனை ஊழியர்கள் சரியான முறையில் சிகிச்சை அளிக்காமலும் பெரும் பாலும் கையூட்டு எதிர்பார்ப்பதாகவும் தகவல் அளிக்கின்றனர் மற்றும் நோயாளிகளை தரையில் படுக்க வைப்பதாகவும் கூறுகின்றனர்.

மேலும் இதனை அரசு அதிகாரிகள் தாங்கள் கவனம் கூர்ந்து இதனை சரி செய்து பொதுமக்களைக் காத்திட வழி வகுக்குமாறும் கேட்டு கொள்ளப்படுகிறது.

**தடுப்பு முறை :** இந்த கொசுவானது சுத்தமான நீரில்தான் பரவுகிறது. எனவே தண்ணீர் உள்ள இடங்களை அடிக்கடி மாற்றி சுத்தமாக வைக்கு மாறும், தண்ணீர் தேங்கிய இடங்களை அகற்றி சுத்தமாக வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

ஏ.சி. மற்றும் பிரிட்ஜ் போன்ற குளிர்சாதன பெட்டியில் உள்ள நீரையும் அடிக்கடி மாற்றி விடவும். மேலும் கொசு கடிக்காத வண்ணம் கொசு வலைகளை உபயோகிக்குமாறும் பொது மக்களை அறிவுறுத்தி வருகின்றனர்.

**– சிலம்பரசு**



## இனிய சுதந்திர தின வாழ்த்துகள்..!

நள்ளிரவில் சுதந்திரம் பெற்றோம்;
விடியலை நோக்கி செல்கின்றோம்;
வேகம் கொஞ்சம் குறைவுதான்;
தடைகளும் கொஞ்சம் அதிகம்தான்;
ஆனாலும் தளர்ச்சி கண்டதில்லை;
தயங்கி நிற்கவும் போவதில்லை;
பயணம் என்றும் தொடரும்;
விடியலை
வென்றும் காண்போம்.



**T. சசிகுமார்**
தலைவர் - மத்திய சென்னை
தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

# இனிய சுதந்திர தின வாழ்த்துகள்..!




நள்ளிரவில் சுதந்திரம் பெற்றோம்...
விடியலை நோக்கி செல்கின்றோம்...
வேகம் கொஞ்சம் குறைவுதான்...
தடைகளும் கொஞ்சம் அதிகம்தான்...
ஆனாலும் தளர்ச்சி கண்டதில்லை...
தயங்கி நிற்கவும் போவதில்லை...
பயணம் என்றும் தொடரும்...
விடியலை வென்றும் காண்போம்...



**K. பாலாஜி**
மாவட்ட துணை தலைவர்
தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்
காஞ்சிபுரம் மாவட்டம்.



# பெண்களை அலற வைக்கும் குண்டாஸ்

தங்களின் அடிப்படை உரிமைகளுக்காக எழும் மக்கள் குரல்கள் நசுக்கப்படும் காலம் இது. மதுக் கடைக்கு எதிராகப் போராடும் பெண்களின் கன்னத்தில் விழும் அறையில் நம் மனம் அதிர்கிறது. உரிமைக் குரல்கள் மீதான அடக்குமுறையின் மற்றொரு அடையாளம்தான் மாணவி வளர்மதி குண்டர் சட்டத்தில் கைதுசெய்யப்பட்டிருப்பது.

இதழியல் மாணவியான வளர்மதியும் ஜெயந்தி என்னும் பெண்ணும் ஜூலை 12 அன்று சேலம் கோரிமேட்டில் அரசுப் பெண்கள் கலைக் கல்லூரி முன்பு நின்றுகொண்டு சில துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர். ஹைட்ரோகார்பன் திட்டத்துக்கு எதிராக புதுக்கோட்டையில் நடத்தத் திட்டமிடப்பட்ட போராட்டத்தில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கும் வாசகங்கள் அடங்கிய அந்தத் துண்டுப் பிரசுரங்களில் நியூட்ரினோ, கூடங்குளம் அணுஉலையின் நிலையம் ஆகியவற்றுக்கு எதிரான வாசகங்களும் இருந்தன. அவர்கள் செய்த 'குற்றம்' இதுதான்.

வளர்மதி மீது குண்டர் சட்டம் பாய்ந்த போதுதான் 'இந்தப்' பிரச்சினையை எந்த எல்லைக்கு எடுத்துச் செல்லத் தமிழக அரசும் காவல் துறையும் விரும்புகின்றன என்பது தெரியவந்தது. இதற்கிடையே ஜெயந்தி ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். குண்டர் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டிருப்பதால் வளர்மதி ஒரு வருடம் சிறையில் அடைக்கப்படும் அபாயம் இருக்கிறது. இப்படியான பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுக்கும் அவரது போராட்ட குணத்துக்காகத்தான் இன்றைக்கு 'நக்சல்களுடன் தொடர்புடையவர்' என்னும் முத்திரை அவர்மீது விழுந்திருக்கிறது.

"அவர் மீது ஆறு வழக்குகள் இருக்கின்றன. குற்றமல்ல - ஆறு வழக்குகள்" என்று விளக்கம் கொடுக்கிறார் முதல்வர் பழனிசாமி. ஆனால், "அவற்றில் இரண்டு வழக்குகள் மாணவர்களின் உரிமை தொடர்பான போராட்டங்கள் தொடர்பானவை. மற்ற நான்கு வழக்குகளும் நெடுவாசல், கதிராமங்கலம் போராட்டங்கள் தொடர்பானவை" என்று குறிப்பிடுகிறார் மக்கள் சிவில் உரிமைக் கழகத்தைச் சேர்ந்த வழக்கறிஞரும் எழுத்தாளருமான ச.பாலமுருகன். குண்டர் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டிருக்கும் முதல் மாணவி இவர்தான் என்கிறார் அவர்.

இலங்கை உள்நாட்டுப் போரில் உயிரிழந்த தமிழ் மக்களுக்கு நினைவேந்தல் நிகழ்ச்சியை, போலீஸாரின் தடையை மீறி நடத்த முயன்ற திருமுருகன் காந்தி, டைசன், இளமாறன், அருண்குமார் ஆகியோர் குண்டர் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டது பெரும் அதிர்ச்சியைத் தந்தது. ஐநா சபை வரை எதிரொலித்த இந்த அத்துமீறல் நடவடிக்கையிலிருந்து அரசு பின்வாங்கவேயில்லை.

1980-களில் பல மாநிலங்களில் கொண்டு வரப்பட்டது குண்டர் சட்டம். 1982-ல் அப்போதைய முதல்வர் எம்.ஜி.ஆரின் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்டது. 'கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், போதைப்பொருள் குற்றவாளிகள், குண்டர்கள், பாலியல் தொழில் குற்றவாளிகள், குடிசைப் பகுதி நிலங்களைப் பறிப்போர், மணல் திருட்டுக் குற்றவாளிகள், திருட்டு வீடியோ குற்றவாளிகளின் அபாயகரச் செயல்கள் தடுப்புச் சட்டம்' என்று நீளும் இந்தச் சட்டத்தை



மக்கள் பிரச்சினைக்காகக் குரல் கொடுப்பவர்கள் மீது திணித்து அடக்குமுறையில் ஈடுபடுகிறது அரசு.

மார்ச் மாதம் மத்திய அரசு வெளியிட்ட புள்ளிவிவரத்தின்படி 2015-ல் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிக அளவில் போராட்டங்கள் நடந்திருக்கின்றன. அதில் அதிக அளவிலான போராட்டங்களை நடத்தியவர்கள் அரசியல் கட்சியினர்தான் என்பது வேறு விஷயம். போராட்டத்துக்கான தேவைகள்தான் கவனிக்கப்பட வேண்டியது.

குடிநீர், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட அரசு சேவைகள் தொடர்பான மக்களின் அதிருப்தி உள்ளிட்ட காரணங்களை முன்னிறுத்தியே அதிக எண்ணிக்கையிலான போராட்டங்கள் நடந்தன. அரசு ஊழியர்கள், மாணவர்கள் என்று பல்வேறு தரப்பினர் போராட்டங்களில் பங்கெடுத்தனர். அப்போதும் போராட்டக்காரர்கள்மீது கடும் நடவடிக்கைகள் பாய்ந்தன. இப்போது, ஒருபடி மேலே போய், சத்தீஸ்கர் போன்ற மாநிலங்களில் பழங்குடியின மக்களின் உரிமைகளுக்காகப் போராடுபவர்கள், பத்திரிகையாளர்கள் போன்றோர்மீது 'நக்ஸலைட்டுகள்' என்று முத்திரை குத்துவதுபோல், தமிழக அரசும் நடந்து கொள்வது தான் அதிர்ச்சி தருகிறது.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டிருப்பதை, அதிகரித்திருக்கும் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் உணர்த்துகின்றன. சமூக விரோதிகள் பலர் குண்டர் சட்டத்தில் கைதுசெய்யப்படாமல் துணிச்சலாக உலவிவரும் சூழலில், சமூகச் செயற்பாட்டாளர்கள்மீது இத்தகைய ஆயுதங்களைப் பிரயோகிக்கிறது அரசு. குறிப்பாக, ஜல்லிக்கட்டுப் போராட்டத்துக்குப் பின்னர் இளைஞர்களிடம் வளர்ந்துவரும் அரசியல் விழிப்புணர்வை மட்டுப்படுத்தும் நடவடிக்கைகளையும் சத்தமில்லாமல் எடுத்துவருகிறது.

கதிராமங்கலத்தில் போராடிய மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டணியின் ஒருங்கிணைப்பாளரான பேராசிரியர் ஜெயராமன் உட்பட 11 பேர் கைதுசெய்யப்பட்டு கிட்டத்தட்ட 20 நாட்களான பிறகும் அவர்கள் விடுவிக்கப்படவில்லை. அவர்கள் பிணையில் வெளிவருவதைத் தடுக்க ஓஎன்ஜிசி நிறுவனமும் சட்டரீதியான அழுத்தம் தருகிறது.


மதுக் கடைகளுக்கு எதிராகப் போராடுபவர்களை அடையாளம் கண்டு, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளைக் காவல் துறை எடுத்துவருகிறது.

எதிர்ப்பு, மாற்றுக் கருத்து ஆகியவை ஜனநாயகத்தின் அடிப்படைக் கூறுகள். அரசின் நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டம் என்பதை அரசுக்கு எதிரான கிளர்ச்சி எனும் அளவுக்குச் சித்தரிப்பது அதிர்ச்சியளிக்கிறது.

அறவழிப் போராட்டம்தான் நம் நாட்டின் சுதந்திரத்துக்கே வழிவகுத்தது என்பதை நாம் மறந்துவிட்டோமா? அறவழியில் வெளிப்படுத்தும் எதிர்ப்பையும், மாற்றுக் கருத்தையும் தொடர்ந்து ஒடுக்குவதன் மூலம் ஜனநாயகத்திலிருந்து சர்வாதிகார ஆட்சியை நோக்கி மத்திய, மாநில அரசுகள் நகர்கின்றனவா என்ற கேள்வி எழுகிறது. குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வது தொடர்பாக நீதிபதி உள்ளிட்டோரைக் கொண்ட ஆலோசனைக் குழு முடிவுசெய்யலாம். அந்த வகையில் உரிமைக் குரல் கொடுப்பவர்களை விடுதலை செய்வதற்கான உத்தரவாதத்தை அரசு தர வேண்டும். இல்லையேல், அறவழியிலான மாற்றுக்குரல்களை நசுக்கும் அரசு எனும் அவப்பெயர்தான் தமிழக அரசுக்கு ஏற்படும்.

**இதுபோல் கருத்து சுதந்திரத்திற்கு எதிராக குண்டாஸ் பாயுமானால் அது குண்டாசுக்கே அவமானமாக கருதப்படும்.**

**– ஆசிரியர்**



# இனிய சுதந்திர தின வாழ்த்துகள்..!

உலக உயிர்கள் அனைத்தும்
ஆண்டவனின் படைப்பு
பல இனங்களை படைத்தே
பொதுவாக அன்பை மலரச் செய்தான்..!

சோலையில் மலர்களின் சங்கமம்
ஒற்றுமையுடன் மனக்கின்ற
பஞ்ச பூதங்கள் அனைவருக்கும்
பொதுவாக கடமையாற்றுகின்றன..!

மனித இனம் மகத்தான இனம்
அன்பை வாழ்வின் வேதமாகவும்
மானுடத்தை தேசத்தின்
நாம் வணங்கும் தேசீய கீதமாகவும்
போற்றுவோம் போற்றுவோம்..!
நம்மில் தோன்றிய வேற்றுமையை
மாற்றுவோம்! மாற்றுவோம்..!

**அனைவருக்கும் சுதந்திர தின நல்வாழ்த்துகள்**

என்றும் அன்புடன்

வஸிஷ்டர் பேரன்

**பூஜ்ஜிய ஸ்ரீ ஸ்ரீமான்**

தங்கமாமுனி சுவாமிகள்,
நாகர்சேனை, நல்லவன்பாளையம்,
திருவண்ணாமலை - 606 603..



செஞ்சி ஒன்றியம் அத்தியூரில் பள்ளி கட்டிடமே இல்லாமல், மாணவர்களே இல்லாமல், ஊராட்சி நூலகத்தில் காலை வந்து உணவு உண்டு, மின் விசிறியில் காற்று வாங்கி, உறங்கிவிட்டு மாலை நேரம் வீடு திரும்பும் இரண்டு ஆசிரியர்களுக்கு மாதா மாதம் தவறாமல் சம்பளம் DEEO,AEEO, இவர்கள் மூலம் சொலையாக சிந்தாம சிதறாம சம்பளம் கொடுக்கபடுகிறது. இந்த அவலநிலை.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த அத்தியூர் கிராமத்தை சேர்ந்த ஊர் பொதுமக்கள் நீண்ட நாட்களாக இந்த கல்விகொள்ளையை பற்றி பலமுறை உயர் அதிகாரிகள் ஊருக்குள் வரும்போது பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர், பெற்றோர்கள் ஊர் முக்கியஸ்தர்கள் முன்னாள் தலைவர்கள் என அனைவரும் கல்வி அலுவலர் AEEO கருணாநிதி என்பவரை பார்த்து சார் எங்கள் ஊராட்சிக்கு உட்பட்ட நூலகம் இது இதில் இரண்டு ஆசிரியர்களை ஏன் தங்க வைக்கிறீர்கள் என்றதும் AEEO மக்களை பார்த்து உங்கள் வேலையை பாருங்கள், இது எண் சொந்த விஷயம் இது உயரதிகாரிகள் தொடக்கப்பள்ளி இயக்குனர் சென்னை மற்றும் DEEO இது போன்று அனைத்து அதிகாரிகளுக்கும் தெரியும்யா போயா என்று பதில் கூறுவது இவரின் பதில்.

அரசு தொடக்கப்பள்ளி வரவேண்டும் என்பதற்காக ஊர் பொது மக்கள் பல இன்னல்களை சந்தித்தனர் என்ற குமுறல் நிலவியது. அத்தியூர் கிராமத்தில் இயங்கி வந்த MENAGEMENT பள்ளி முற்றிலுமாக சரிவர இயங்கவில்லை அந்த பள்ளிக்கு ஆசிரியர் வருவதில்லை மாணவர்கள் ஒழுக்கம் சீர்கேடாக மாறும் ஆபத்தான சுழல் உருவாகும் நிலை தலைதூக்கி நின்றது, அப்போதுதான் அத்தியூர் பொதுமக்களே மரத்தடியில் மாணவர்களை படிக்கவைத்தனர் மரத்தடியிலேயே மதிய உணவு சமைத்து உணவளித்தனர், அப்போது ஆசிரியர் யாரும் இல்லை, MENAGEMENT பள்ளியும் கூரையே இல்லாமலும், போனது.

அப்பள்ளியை இயக்கிய மேனேஜர் நீலகண்டன் என்பவர் அவர் சரிவர இயக்க முடியாத பள்ளி கட்டிடம், நிலமும், இவைகளை ஒட்டுமொத்தமாக அதே ஊரை சார்ந்த நபருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டு ஊரைவிட்டே சென்று விட்டார் என்பதும் அப்பகுதி மக்களின் வாக்கு மூலம். பிறகு அரசுப்பள்ளி அத்தியூர் கிராமத்திற்கு வேண்டும் என்று அப்பகுதி மக்கள் பலதரப்பட்ட போராட்டங்கள் ஆர்பாட்டங்கள், செய்தனராம் உண்ணாவிரதம் சாலை மறியல் என அனைத்துக் கட்ட கோரிக்கையும் வலியுறுத்தி எங்கள் ஊர்ருக்கு அரசு தொடக்கப் பள்ளி பல போராட்டத்திற்கு பிறகு எங்கள் அத்தியூர் கிராமத்திற்கு ஒரு வழியாக பள்ளி வந்தது, பள்ளிவந்த பிறகு செஞ்சி AEEO கருணாநிதி என்பவர் யாரோ அதிகாரிகள் கூறியது போல இரண்டு ஆசிரியரை எங்கள் நூலகத்தில்

**கண்டுகொள்ளுமா தமிழக அரசு..?**



# பள்ளிக் கூடமும் இல்லை மாணவர்களும் இல்லை

## சம்பளம் வாங்கும் ஆசிரியர்கள்

தங்க வைத்து போலியான வருகை பதிவேடு உருவாக்கி அதில் மாணவ, மாணவியர் படிப்பது போலும், அதற்கு இவர் மாதந்தோறும் விசிட் என்ற பெயரில் ஆய்வு நடத்தி

வருவது மிகப்பெரிய கொள்ளை என்பதை அவ்வூரை சேர்ந்த மக்களே புரிந்து கடுமையான நடவடிக்கை எடுக்க ஆரம்பித்ததின் காரணமாகத்தான் ஊடகவாயிலக இந்த கல்வி பண கொள்ளை சன்பவம். பள்ளிகட்டடமோ மாணவர்களோ இல்லை இப்படி இயங்கும் ஆசிரியரின் வேலை அது என்ன வேலை என்பது புரியாத புதிராக இருந்து வந்தது.

ஏற்கனவே இயங்காத அரசால் நிராகரிக்கப்பட்ட MANAGRMENT பள்ளியில் இரண்டு பெண் ஆசிரியர்கள் ஒருவர் வனிதா தலைமை ஆசிரியர், இன்னொருவர் பரணி உதவி ஆசிரியர் என்று போது மக்கள் மத்தியில் AEEO கருணாநிதி கூறி இவர்களை ஊர் நூலகத்தில் கடந்த இரண்டரை வருடமாக தங்க வைத்து ஊதியம் வழங்கி வருகிறார்.

முறையற்ற முறையில் தலைமை ஆசிரியர் பதவி வழங்கி, இன்னொரு ஆசிரியரை நியமனம் செய்துள்ளார். இப்படி இருக்கும் பட்சத்தில் திடீர் என்று AEEO விசிட் செல்கிறார் 12/07/2017 அன்று நூலகத்தில் ஆசிரியர் களாக தங்கியிருக்கும் நபரிடம் இன்னொரு ஆசிரியர் எங்கே என்று விசாரித்த பிறகு அவரோ கூறிய பதில் தலைமை ஆசிரியர் பயிற்சிக்காக சென்று உள்ளார், என்ன பயிற்சி என்று கேட்டதும், ஆங்கில, கணித, அறிவியல், பாடத்திற்கு பயிற்சிக்காக சென்று உள்ளார், என்று உதவி ஆசிரியர் பரணி என்பவர் அத்தியூர் ஊராட்சிக்கு சொந்தமான நூலகத்தில் இருந்து கொண்டு, மிகதெளிவாக பதில் அளிக்கிறார், இது உண்மையில் பெரும் ஊழல் நிறைந்த செயல் என்பதைகண்டு பொது மக்கள் அனைவரையும் அதிர வைத்தது.

தமிழக அரசு மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க ஊதியம் கொடுப்பது ஒரு பக்கம் இருந்தாலும் வேலையே செய்யாமல் பள்ளியே இல்லாமல், மாணவர்களே இல்லாமல் வருகை பதிவேடு தயார் செய்து மாதமாதம் ஒரு தலைமை ஆசிரியை, ஒரு உதவி ஆசிரியை என இவர்களுக்கு சம்பளம் வழங்கபடுகிறது.

இது கடந்த இரண்டரை வருடமாக அரங்கேறி வருகிறது இது அடிக்கடி மாதமாதம் அரசுக்கு நிதி இழப்பு செய்யும் அரங்கேற்றம் செய்யும் அதிகாரிகளை இந்த அரசு தண்டிக்குமா அல்லது ஆய்வு செய்து ஊக்கு விக்குமா என்பது இந்த பாரம்பரியமான அத்தியூர் கிராமத்து மக்களின் அலறல் கலந்த குமுறலாக ஒலிக்கிறது.

**– சரவணன்**


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

# மக்கள் விசாரணை

Applied in **NEWS PAPER ASSOCIATION OF INDIA**

லஞ்ச ஊழல் விழிப்புணர்வு

ஆண்டு-6 ஆகஸ்ட்-2017 இதழ் - 3

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன் (பி) லிட்., சார்பாக
வெளியிடுபவர் ஆசிரியர்
**A. மவுரியன்,** B.A.,Dip. Journilisam,

• ஆசிரியர் குழு
**A. காதர் மொய்தீன், ஆ.தே. முருகையன்,
V. அருணாச்சலம், காசி. அரங்கநாதன், மு. பரமசிவம்**

• நிர்வாக ஆசிரியர்
**வீ. வடிவேல்,** B.B.A.,

• உதவி ஆசிரியர்
காக்களூர் **பாபு தங்கவேல்**

• துணை ஆசிரியர்கள்
**ஆர்.ஆர். சண்முகவேல், கே. ரமேஷ்குமார்,
S.கோபி, M. தரணி. எஸ். சரவணன், பி. மாரிமுத்து,
D. ரவி, வீரஆறுமுகம், A. பாலச்சந்தர்,
ந. நித்யா, கே.பாலாஜி, அ.மு.ரமணாத்திரி**

• முதன்மை செய்தியாளர்கள்
**சமயசெல்வம்,** மதுரை. **ராம்குமார், பிரகாஷ்,** சேலம்.
**சத்தியராஜ்,** நாமக்கல். **பாலகிருஷ்ணன், செந்தில்குமார்,
நாகராஜ பெருமாள், S. யோவான் ஜான்** கோவை.
**R. ஜெயா, K. ஷமீம் ஷகிலா, P. சாந்தா,** தென்சென்னை
**யு. அக்ரம்கான், சுக்கூர்கான்,** கிருஷ்ணகிரி.
**பா. சுப்பிரமணியன்,** திருநெல்வேலி. **நாகராஜ்,** மூணாறு.
**மாரிமுத்து,** உளுந்தூர்பேட்டை, **சுசீ ஈஸ்வர்,** தென்காசி.
**ராமசுப்பிரமணியன்,** ராஜபாளையம். **சிலம்பரசன்,** தர்மபுரி,
**அ. சிவராமன்,** காஞ்சிபுரம்.

• நிருபர்கள்
**எம். நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, ராஜேஷ்
அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின்**

• சட்ட ஆலோசகர்கள்
**M. குணசீலன்,** B.Com.,M.L.,
**M. சுதாகர், B.Sc.,B.L.,**
(உயர்நீதிமன்றம், சென்னை.)

• புகைப்பட நிருபர்கள் :
**எம். சந்தோஷ்சிவன், K. மணிவண்ணன்**


• இதழ் வடிவமைப்பு : **AKS CREATIVE'S**

அலுவலகம் :

**மக்கள் விசாரணை**

நெ.21/12, 2-வது சந்து, நடராஜ் பில்டிங் முதல் மாடி,
ஜார்ஜ் டவுன், சென்னை - 600 001.
Email : news@makkalvisaranai.com / www. makkalvisaranai.com
Information Contact : feedback@makkalvisaranai.com
**Phone : 044 - 4354 2611, 93821 33334**

Press & Registration of Book Act-in ன்படி
செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார்.
எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள
நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.



# சிந்தனை முத்துக்கள்..!

## மூன்று பேச்சிளர்கள்

1. **தேவர் :** ஆன்மிகத்தை நேசித்து திருமணமே செய்யாமல் வாழ்ந்து மறைந்த "பச்சைத்தமிழன்"
2. **காமராஜர் :** அரசியலை நேசித்து "திருமணமே" செய்யாமல் வாழ்ந்து மறைந்த பச்சை தமிழன்
3. **அப்துல் கலாம் :** அறிவியலை நேசித்து திருமணமே செய்யாமல் வாழ்ந்து மறைந்த பச்சைத் தமிழன்

## ஞானம்

நீ அதுவாகவே இருக்கிறாய் அடைவதற்கு எதுவுமில்லை என்பதை புரிந்து கொள்வதே ஞானம்.

## எச்சரிக்கை

- திறமை என்பது கடவுளால் கொடுக்கப்பட்டது அடக்கத்துடன் இருங்கள்..!
- புகழ் என்பது மனிதரால் கொடுக்கப்பட்டது..!
- அகம்பாவம் என்பது நமக்கு நாமே கொடுத்துக் கொள்வது..!

எச்சரிக்கையுடன் இருங்கள்...

## தூண்டுகோல்...

நிர்வாகம் என்பது நம்முடைய அதிகாரத்தை மற்றவர்மேல் திணிப்பது அல்ல.. முட்டாள்கூட அதைச் செய்ய முடியும். சிறந்த நிர்வாகம் என்பது மற்றவர்களின் முழுத்திறமையயும் வெளிப்பட தூண்டுகோலாக இருப்பது.

## எது முக்கியம்?

வாழ்க்கையில் அன்பான உறவு கிடைப்பது முக்கியம் அல்ல... வாழ் நாள் முழுவதும் அன்பாக இருப்பதே முக்கியம்.

## இரண்டு அடி

* இரண்டு அடியில் புரிய வைப்பவர் திருவள்ளுவர்..!
* ஒரே அடியில் புரிய வைப்பவள் மனைவி.!!

## யார் மனிதன்?

பொறுமையும் பணிவும் அதிகமானால் கோழை என்பர்...
அன்பும் இரக்கமும் அதிகமானால் ஏமாளி என்பர்...
புன்னகையும் வெகுளித் தனமும் அதிகமானால் பைத்தியம் என்பர்...
கோபமும், கேள்வியும் அதிகமானால் திமிர் என்பர்...
மொத்தத்தில் மனிதனிடம் இருக்க வேண்டிய எதுவுமே இல்லாதவனைத்தான் இங்கு மனிதன் என்பர்.

## ஆ.தே.முருகையன் பஞ்ச்

சுதந்திர தின கொண்டாட்டம் ஒரு பக்கம்.!
கோடிக் கணக்கில் வரி கட்டும்
உலக நாயகன் பேச்சுரிமை இன்றி
திண்டாட்டம் மறுபக்கம்!
பாரத நாட்டில் பாமரனாய் வாழ்பவன்
வாய் திறக்கவே போராடுவது ஒரு பக்கம்!
என்ன சாதித்தது சுதந்திரம் எதற்கு?
இந்த கொண்டாட்டம்!



## ஜி.எஸ்.டி.

ஜி.எஸ்.டி. வரி அதிகம் என்று புலம்பிக் கொண்டிருக்கும் மக்களே நீங்களே ஏன் கர்ப்பரேட்டிடமே பொருள் வாங்குகிறீர்கள்..?



இவர்களைப்போன்றவர்களிடம் பொருள் வாங்குங்கள் எந்த வரியும் கிடையாது. சேவை வரியும் கிடையாது... மக்கள் நலன் கருதி மக்கள் விசாரணை வெளியீடு.

## நிஜம்

நிழல்கூட நீ நினைப்பதுபோல்
நடப்பதில்லை...!
பின் ஏன்?
மற்றவர்களிடம் எதிர்பார்க்கிறாய்...
திரும்பிப்பார் : அழகானவர்கள்
திருப்பிப் பார்க்க வைக்கிறார்கள்.!
அன்பானவர்கள் திரும்ப
நினைக்க வைக்கிறார்கள்..!

## காயம்

எவ்வளவு அன்போடு அணைத்தாலும்
கத்திக்கு வெட்டத்தான் தெரியும்.
அதுபோலதான் சில உறவும்.
எவ்வளவு அன்பாக நாம் இருந்தாலும்
காயப்படுத்தி விடுவார்கள்.

## எவரும் இல்லை

ஆண்டவன் ஒரு நாள் கடை விரித்தான்...!
அதில் ஆயிரம் ஆயிரம் பொருள் குவித்தான்...
அவரவர் நிலைக்கு விலையை சொன்னான்
பெண்களோ அழகை வாங்க வந்தனர்..!
ஆண்களோ ஆசையை வாங்க வந்தனர்..!
தலைவர்கள் புகழை வாங்கிக் கொண்டனர்..!
புலவர்கள் பொய்யை வாங்கிக் கொண்டனர்..!
திருடர்கள் பார்த்திட வழி கேட்டனர்..!
ஊமைகள் பேசிட மொழி கேட்டார்..!
உறவினர் மாண்டவர் உயிர் கேட்டார்..!
ஆனால் அன்பை வாங்க எவரும் இல்லை...!

## உலகில் புனிதமான தொழில்கள் இரண்டு...

1. மருத்துவர், 2. ஆசிரியர்

**மருத்துவர் :**
மனிதனை பிணமாகாமலும்,
**ஆசிரியர் :**
மனிதனை நடைபிணமாகாமலும்
பார்த்துக் கொள்வார்.

# அனைவருக்கும்
# இனிய சுதந்திர தின வாழ்த்துகள்!



இன்று சிலிர்க்கும்
அழகின் காற்றுவெளியில்
இடைநிறுத்தாத கொடிகள் அசையும்
தருணத்தில் கண்ணீரின் ஈரம் காயாவிட்டாலும்
எம் வீரத் தியாகிகளை நினைவுகூறும்
நன்றிசெலுத்தும் நன்னாளின் மகிழ்வாக
பட்டொளி வீசிப் பறக்குமந்த
தேசியக்கொடிக்கு வீர வணக்கம்



**R. குமார்**
தலைவர்



**N. சிலம்பரசு**
செயலாளர்



**B. மோகன்ராஜ்**
பொருளாளர்

தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம், தர்மபுரி மாவட்டம்



# அழிந்து வரும் திரைப்படத் துறை

தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் ஜி.எஸ்.டி.யைக் கண்டு அலறுவதுபோலவே 'க்யூப்' சினிமா கட்டணத்துக்கும் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வருகிறார்கள். கட்டணத்தைக் குறைக்காவிட்டால் நாங்கள் வேறு டிஜிட்டல் சினிமா நிறுவனத்தை நாடுவோம் என்ற நிலைப்பாட்டை விஷால் தலைமையிலான தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம் எடுத்திருக்கிறது. தயாரிப்பாளர் தாணு தலைவராக இருந்தபோது, முகம் காட்டிய இந்த க்யூப் கட்டணப் பிரச்சினை தற்போது மீண்டும் தலை தூக்கியிருப்பதற்கு என்ன காரணம்? அதைத் தெரிந்துகொள்ளும் முன் டிஜிட்டல் சினிமா பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.


படப் பெட்டிகளின் காலத்தில் படச் சுருளில் ஒரு பிரதி எடுக்க 50 ஆயிரம் ரூபாய்வரை செலவானது. படப் பிரதியின் விலையை மனதில் வைத்துக் குறைந்த அளவே பிரதிகள் போடப்பட்டு, அதற்கு ஏற்ற எண்ணிக்கையில் திரையரங்குகளில் படங்கள் வெளியாகிவந்தன. இருப்பினும் பெரிய நடிகர்களின் படங்கள் என்றால் அதிகபட்சமாக 250 பிரதிகள் எடுக்கப்படும் நிலை இருந்தது. தற்போது தயாரிப்பாளர்கள் தரப்பில் விசாரித்தபோது, "டிஜிட்டல் முறையில் ஒரு படத்தை மாஸ்டரிங் சிடி செய்வதற்கு 500 ரூபாய்வரை செலவாகிறது.

திரையிடல் என்பது டிஜிட்டலாக மாறும் முன்புவரை, பிலிம் படப் பிரதிகளைத் திரையரங்குகளுக்குத் தயாரிப்பாளர்கள் அனுப்பி வந்தார்கள். பட வெளியீட்டின் முதல் நாள் முதல் காட்சிக்குப் படப் பெட்டி பேருந்து அல்லது ரயிலில் வந்திறங்கும். அதை யானை மீது ஏற்றிக்கொண்டு மேள தாளம் முழங்க, கரகாட்டம், ஒயிலாட்டத்துடன் திரையரங்குக்கு கொண்டுவந்து சேர்ப்பார்கள் ரசிகர்கள். தங்கள் அபிமான நட்சத்திரங்களின் கட்- அவுட்டுக்குப் பாலாபிஷேகம் செய்து பட்டாசு வெடித்தபின் படக்காட்சித் தொடங்கும். இன்று கட் - அவுட் மறைந்து பிளெக்ஸ் பேனர்கள் வந்துவிட்டது போலவே, படப் பெட்டிகள் மறைந்து டிஜிட்டல் சினிமா வந்துவிட்டது.

மாஸ்டர் சிடியில் பதிவுசெய்யப்பட்ட டிஜிட்டல் திரைப்படம், திரையரங்கில் அமைக்கப்பட்டிருக்கும் டிஜிட்டல் புரொஜெக்டர்களில் தரவிறக்கம் செய்யப்படுகிறது. கம்ப்யூட்டர்களுடன் இணைந்த அதிநவீன டிஜிட்டல் புரொஜெக்டர்களில் டிஜிட்டல் சினிமாவை ஏற்றித் தருவதற்கென்று தனது தொழில்நுட்ப ஊழியரை அனுப்புகிறது டிஜிட்டல் சினிமா நிறுவனம். காட்சி நேரத்துக்குச் சற்று முன்னதாக நிறுவனம் தரும் கடவுச் சொல்லை உள்ளீடு செய்தால் மட்டுமே திரையில் காட்சி விரியும். இந்த முறையில் திரையரங்குகளில் டிஜிட்டல் புரொஜெக்டர்களை நிறுவித் தந்து, டிஜிட்டல் சினிமா சேவையை வழங்கும் பல நிறுவனங்கள் இந்தியச் சந்தையில் இருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் சென்னையை மையமாகக் கொண்டு இயங்கிவரும் 'க்யூப்'.

"தயாரிப்பாளர்களின் கோரிக்கை நியாயமானது. அதை மறுக்கவில்லை. ஆனால், பிலிம் சுருள் இருந்த காலத்தில் கார்பன் குச்சி

கொண்டும், மின் விளக்கு கொண்டும் திரையிட்ட புரொஜெக்டர்களின் விலை ரு. இரண்டு லட்சம் முதல் மூன்று லட்சத்துக்குமேல் கிடையாது. அந்த புரொஜெக்டர்களில் பழுது என்றால் படம் திரையிடும் தொழிலாளியே அதைச் செய்துவிடுவார். ஆனால், இன்றைய அதிநவீன டிஜிட்டல் புரொஜெக்டர்களுக்கு முதலீடு செய்கிற நிலையிலா ஒன்று அல்லது இரண்டு திரைகளை வைத்திருக்கும் திரையரங்க உரிமையாளர்கள் இருக்கிறார்கள்?




தமிழகத்தில் இருக்கும் 1,100 திரையரங்குகளில் 80 சதவீதத் திரையரங்குகள் ஒன்று அல்லது இரு திரைகள் கொண்டவைதானே? எங்களது சக்தியை ஆய்வு செய்தபின் தான் க்யூப் எங்களுக்குத் தவணை முறையில் புரொஜெக்டர்களைத் தர முன்வந்தது. அதற்காக, ஐரோப்பா முழுவதும் நடைமுறையில் இருக்கும் டிசிபி கட்டணத்தின் மூலம் தரமான சினிமா திரையிடலுக்கு வழிவகுத்தது.

இன்று ஒரு சிறு படம் கூட 150 திரைகளில் ஒரேநேரத்தில் வெளியாகிறது; பெரிய படம் என்றால் 600 முதல் 900 திரைகள்வரை வெளியாகி ஐந்தே நாட்களில் வசூல் இலக்கை எட்டிவிட முடிகிறது என்றால் அதற்கு டிஜிட்டல்தானே காரணம். இந்த அதிநவீன புரோஜெக்டர்களின் அப்டேட் வெர்ஷன்கள் வந்துகொண்டே இருப்பது மட்டுமல்ல; அவற்றில் ஏற்படும் பழுதுகளையும் க்யூப் நிறுவனமே நீக்கிக் கொடுக்கிறது. இது தயாரிப்பாளர்கள் சங்கம், திரையரங்க உரிமையாளர் சங்கம், க்யூப் நிறுவனம் ஆகிய மூன்று தரப்பும் அமர்ந்து பேசி தீர்க்க வேண்டிய பிரச்சினை. இதில் எடுத்தோம் கவிழ்த்தோம் என்ற நிலைப் பாட்டை எடுப்பது தீர்வு கிடைக்க வழி கிடைக்காது" என்கிறார்.

இது திரையரங்கிலிருந்து காப்பி செய்யும் வீடியோ பைரசியைத் தடுத்திருக்கிறது. மொத்தம் 400 கோடி ரூபாய் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தின் மூலம் தொடங்கப்பட்ட க்யூப் நிறுவனத்துக்குக் கிடைத்துவரும் லாபம் வெறும் 6 சதவீதத்துக்கும் குறைவாக இருக்கிறது. எங்களை நம்பிப் பல முன்னணி நிறுவனங்கள் முதலீடு செய்திருக்கின்றன. இந்த மூலதனத்தை சேமிப்புக் கணக்கில் செலுத்தினால் கூட சற்று கூடுதலாக லாபம் கிடைத்திருக்கும்.

இரண்டு ஆண்டுகளுக்குமுன் இதே பிரச்சினை வந்தபோது தயாரிப்பாளர் சங்க நிர்வாகிகளுக்கு வெளிப்படையாக எல்லாவற்றையும் எடுத்துக்கூறினேன். தற்போது பதவியேற்றிருக்கும் நிர்வாகக்குழு மின்னஞ்சல் வழியே தொகையை உடனடியாக குறைக்க வேண்டும் என்று கேட்டார்கள். நான் உண்மை நிலைமையை அவர்களுக்கு விளக்கி, நீங்கள் கேட்பது போல் குறைத்தால் நிறுவனத்தை மூடிவிட்டுச் செல்லவேண்டியதுதான். ஆனால் காட்சிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் விலையைக் குறைக்கத் தயாராக இருக்கிறோம்' என்று கூறினோம். அதற்கு நிர்வாகக் குழுவிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை.

தற்போது வேறு நிறுவனத்தைக் கொண்டு வருவோம், 5,000/- ரூபாய்க்கும் 2,000/- ரூபாய்க்கும் தருவோம் என்பதாகக் கூறுகிறார்கள். புளூரே டிவிடியை ஒளிபரப்பும் ஒரு லட்ச ரூபாய் புரோஜெக்டரை அமைத்தால் மட்டும் தான் இந்த விலைக்குத் தர முடியும். பிறகு எதற்கு 2கே, 4கே என்ற தரம்?

ஒரு லட்ச ரூபாய் புரஜெக்டர் என்றால் அதில் பைரசி பாதுகாப்பு இருக்கிறது என்று சொல்லமுடியுமா? தயாரிப்பாளர்கள் சங்கம் இதுபோன்ற உண்மைகளை உணர்ந்து கொண்டு அழைத்தால் நாங்கள் பேசத் தயாராகவே இருக்கிறோம். அவர்கள் ஒத்துழைக்காத நிலை ஏற்படுமானால் இந்தத் தொழிலை மூடுவதைத் தவிர எங்களுக்கும் வேறு வழியில்லை" என் கிறார் க்யூப் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் செந்தில்.

**– அருணாசலம்**

# பிறந்த நாள் வாழ்த்துகள்..!



**21-7-2017 அன்று**

பிறந்தநாள் கொண்டாடிய
மக்கள் விசாரணையின்
துணை ஆசிரியரும்,
ஐ லுக் டிஜிட்டல் ஸ்டுடியோ நிறுவனருமான

## M.தரணி



**ஒவ்வொரு ஆண்டும்
புதுபுது சொந்தங்கள்,
புதுபுது கனவுகளுடன்
உன்னை
விரும்புவோரெல்லாம்
உன்னை சுற்றி நின்று
வாழ்த்தும் அந்த - இனிய
நாள்தான் நீ பிறந்த இந்த நாள்.
இதுபோல் இன்னும் பல பிறந்தநாள் கொண்டாட
அன்புடன் வாழ்த்துகிறோம்....**

அன்புடன்,

**ஐ லுக் டிஜிட்டல் ஸ்டுடியோ
மற்றும் ஊழியர்கள், நண்பர்கள்**
வடபழனி, சென்னை.

## காசி விஸ்வநாதர் உடனுறை விசாலாட்சி தயார்

ஆன்மிக தொடர்-4



# அற்புத ஆலயங்களின் ஸ்தல வரலாறு!

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சிவபெருமானால் உருவாக்கப்பட்ட நகரம் காசி. இத்தலம் உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ளது. இவ்வூருக்கு வாரணாசி, மகாமயானம், அபிக்தம், ஆனந்த பவனம் ஆகிய பெயர்களும் உள்ளன. மிகவும் பழமை வாய்ந்த நகரம். வாரணா, ஹசி என்ற நதிகளுக்கும் இடையில் இவ்வூர் அமைந்துள்ளதால் வாரணாசி என்ற பெயர் வந்தது.

இவ்வூரை பனாரஸ் என்றும் சொல்வார்கள். கல்வியை வழங்கும் கிரகமான புதன் காசி விஸ்வநாதரைப் பூஜித்ததன் பயனாக நவக்கிரகங்களில் ஒருவராக கிரகபதவி பெற்றார். கல்வியில் சிறந்து விளங்க மாணவர்கள் காசிவிஸ்வநாதரை வழிபாடு செய்வது சிறப்பாகும். காசி என்றால் ஒளிநகரம் என்பது பொருள். காசியில் இறந்து போவது சொர்க்கத்தைத் தரும் என்று சொல்வார்கள். இங்கே இறந்து போகும் பறவைகள், மிருகங்கள் மற்றும் சகல ஜீவராசிகளுக்கும் மரணம் நேரும் போது அவற்றின் காதுகளில் ராமநாமத்தை சிவனே ஓதுகிறார் என்பது ஐதீகம். ஓம் என்ற பிரணவத்தை ஓதுவதாகவும் சொல்லப்படுவதுண்டு.

இந்த கோயிலை முதன்முதலில் கட்டியது யார் எனக் கேட்டால் ஆச்சரியமாக இருக்கும். முகலாய சக்ரவர்த்தி அக்பர் தனது வருவாய்துறை அமைச்சர் தோடர்மால் மூலமாக கட்டினார். தோடர்மால் தனது குருவான நாராயண் பட் உதவியுடன் ஷகி கஜானா நிதியிலிருந்து இந்தப் பணியைச் செய்துள்ளார். ஆனால் காசி விஸ்வநாதர் கோயிலின் பழங்கால வரலாற்றிலும் கல்வெட்டுகளிலும் இதுபற்றிய தகவல்கள் ஏதுமில்லை. கி.பி *1034*ம் ஆண்டு முதல் காசி விஸ்வநாதர் கோயில் பலமுறை முகலாய பேரரசர்களால் இடித்து தள்ளப்பட்டுள்ளது. இதை இந்துக்கள் திரும்பத் திரும்ப கட்டி வந்துள்ளனர்.

*1669*-ல் அக்பரின் பேரன் அவுரங்கசீப் விஸ்வநாதர் கோயிலில் உள்ள சிருங்கர் மண்டபத்தின் சுவரை ஆதாரமாகக் கொண்டு கோயில் அருகில் ஒரு மசூதியையும் கட்டினார். இப்போதும் இந்த மசூதி இருக்கிறது. சிருங்கர் மண்டப சுவரை ஆதாரமாகக் கொண்டு மசூதி கட்டப்பட்டுள்ளதை கண்கூடாகப் பார்க்கலாம். இதிலிருந்து காசி கோயில் ஒரு புண்ணி சத்திரம் மட்டுமல்ல ஒற்றுமையின் சின்னம் என்பதும் நமக்கு புரிகிறது.

இங்கு அன்ன பூரணி, சத்திய நாராயணர், டுண்டி ராஜவிநாயகர், சாட்சி விநாயகர், இராமர், அனுமன், சனிபகவான், துர்காதேவி, கவுடி மாதா, பைரவர், மகாகாளர், மகா காளி, பாண்டுரங்கன், நீலகண்டர், தண்டபாணீச்வரர் ஆகியோர் பரிவார மூர்த்திகளாக உள்ளனர். விசுவநாதர் கோயில் கர்ப்பகிருகம் வடநாட்டுப்பாணியில் கோபுரம் உயரமாகவும், கொடியுடனும் காணப்படுகிறது.

மூலவர் விசுவநாத லிங்கம் சிறியதாகபூமி மட்டத்திலிருந்து ஒரு பள்ளத்தில் உள்ளார். பக்தர்கள் மண்டி போட்டுக் குனிந்து விசுவநாதரைத் தொட்டு வழிபடுகின்றனர். லிங்கத்தின் தலையில் தங்கமுலாம் பூசப்பட்ட தாமிரத் தகடு பொருத்தப்பட்டுள்ளது. லிங்கத்தைச் சுற்றிலும் வெள்ளித் தகடுக் கட்டு அமைத்துள்ளார்கள். லிங்கத்தின் மேல் ஒரு பாத்திரம் கட்டித் தொங்க விட்டுள்ளார்கள். அதிலிருந்து கங்காதீர்த்தம் சொட்டுச் சொட்டாக லிங்கத்தின் மீது விழுந்து அபிஷேகம் செய்கிறது.


கோயிலின் பின்பக்கம் ஒரு தனி நந்தி,

சுவற்றைப் பார்த்துள்ளார். இதுதான் ஆதி நந்தி. ஆதி விசுவநாதர் கோயிலிருந்த இடத்தில் மசூதி உள்ளது. அந்த நந்தியின் அருகேதான் ஞானவாவி என்ற தீர்த்தக் கிணறு உள்ளது. இப்போதுள்ள காசி விஸ்வ நாதர் கோயில் 1777ம் ஆண்டு கட்டடப்பட்டது. இந்தூர் ராணி அகல்யாபாய் இக்கோயிலைக் கட்டினார். இந்த கோயில் மிகவும் சிறிய கோயில் தான். குறுகலான பாதையில் சென்று கோயிலை அடைய வேண்டும். பூஜை பொருட்களைக் கொண்டு பக்தர்களே ஆராத னைகள் அனைத்தையும் செய்யலாம். அர்ச்சகரிடம் கொடுத்து பூஜிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அன்னபூரணி கோயிலும், விசாலாட்சி கோயிலும் தனியே சிறிது தொலைவில் உள்ளன. விசாலாட்சி கோயில் நமது தென்னாட்டுப் பாணியில் உள்ளது. இங்கே நவக்கிரகங்களும் உள்ளன. அன்னபூரணி அம்பாள் கோயிலில் தீபாவளி அன்று அன்னக்கொடி உற்சவம் நடக்கும். அப்போது, அம்பாள் லட்டுத் தேரில் பவனி வருவாள்.

இங்கு விஸ்வநாதர் மகிழ்ச்சி பெருக்குடன் எழுந்தருளி உள்ளார். எனவே, இவ்வூரை ஆனந்த பவனம் என்கின்றனர். வெள்ளித்தகடு பதித்த தொட்டி யில், தங்க ஆவுடையார் மீது இவர் காட்சியளிக்கிறார். சிவபெருமானின் அடியையும் முடியையும் காண பிரம்மாவும் திருமாலும் முயன்றபோது, அவர்களை எரித்து அழித்த இடம் இவ்வூரே என்று கூறுவ துண்டு. எனவே, இவ்வூருக்கு மகாமயானம் என பெயர் வந்தது. விசாலாட்சி அம்மைக்கு தனி சன்னதி உள்ளது. கங்கை நதியின் மேற்குக்கரையில் காசி அமைந்துள்ளது. காசியிலிருந்து வடக்காக 30கி.மீ. தொலைவு வரை கங்கைநதி ஓடுகிறது. இங்கே வடமுக மாக கங்கை ஓடுவதால் உத்தர வாகினி என்று அழைக்கின்றனர்.

கங்கை நதியின் ஓரத்தில் ஏராளமான படித் துறைகள் உள்ளன. இதில் 64 தீர்த்தக்கட்டடங்கள் உள்ளன. இத்தீர்த்தக்கட்டடங்கள் அனைத்திலும் நீராடுவது மிகுந்த பலனைத் தரும். ஆனால், எல்லோ ருக்கும் இது சாத்தியமல்ல. எனவே, அஸ்சங்கம், தசாஸ்வமேத கட்டம், வரணசங்கம கட்டம், பஞ்ச கங்கா கட்டம், மணிகர்ணிகா கட்டம் ஆகிய படித் துறைகளில் ஒரே நாளில் நீராடி மகிழ்வது மிகவும் புனிதமானதாகும். இதற்கு பஞ்சதீர்த்த யாத்திரை என்று பெயராகும்.

அஸ் நதி கங்கையில் கலக்கும் பகுதியில் அஸ் சங்கம கட்டம் அமைந்துள்ளது. இங்கிருந்து தான் காசி தலம் ஆரம்பமாகிறது. இக்கட்டத்தை காசியின் நுழைவுவாயில் என்று சொல்வர். இக்கரையில் அமைந்துள்ள சிவலிங்கம் அஸ்சங்கமேஸ்வரர் எனப் படுகிறார். முதலில் அஸ்சங்கமத்தில் நீராடி சங்க மேஸ்வரரை வணங்க வேண்டும்.



காக்கலூர்
கு. துரைபாபு

துளசி ராமாயணத்தை எழுதிய துளசிதாசர் இந்த கட்டத்தில் இறங்கி கங்கையில் மறைந்தார் என்பது குறிப்பிடத்தக்க அம்சம். இதையடுத்து தசாஸ்வமேத கட்டத்தில் நீராட வேண்டும். இங்கு பிரம்மன் பத்து அசுவமேத யாகங்களை செய்ததால் தசாஸ்வமேத கட்டம் என பெயர் பெற்றது.

இந்த தீர்த்தக்கரையில் சூலடங்கேஸ்வரர் என்ற சிவலிங்கம் உள்ளது. இதையடுத்து வரணசங்கம கட்டத்தில் நீராடச் செல்ல வேண்டும். இங்கு வருண நதி கங்கையில் கலக்கிறது. இந்த கரையில் உள்ள ஆதிகேஸ்வரரை வணங்கிவிட்டு, யமுனை, சரஸ்வதி, சிரணா, தூதபாய் ஆகிய நதிகளும் கங்கையில் கலக்கும் பஞ்சகங்கா கட்டத்திற்கு செல்ல வேண்டும். இங்கு நீராடி விட்டு கரையிலுள்ள பிந்துமாதவர் மற்றும் கங்கேஸ்வரரை வணங்க வேண்டும். பஞ்ச தீர்த்தக் கட்டங்களில் ஐந்தாவதாக அமைந்துள்ள மணி கர்ணிகா கட்டத்திற்கு செல்ல வேண்டும். இங்கு நீராடி பித்ருக்களுக்காக தர்ப்பணம் செய்ய வேண்டும். இந்த கரையிலுள்ள மணிகர்ணிகேஸ்வரரையும், அம்பாளையும் வழிபட வேண்டும்.

மகாராஜா ரஞ்சித்சிங் கோயிலுக்கு 820 கிலோ தங்கத்தை நன்கொடையாக வழங்கினார். காசியில் மூலவர் அவிமுகேஸ்வரர் என்றும் விஸ்ஹேஸ்வர் என்றுமே அழைக்கப்பட்டார். இப்போதுள்ள விஸ்வ நாதர் என்ற பெயர் வேதம் கற்ற அறிஞர்களால் அதன்பிறகே சூட்டடப்பட்டது. பொதுவாக வயதான வர்களே இந்த தலத்திற்கு போய்வர வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. இளைஞர்களும் இங்கு சென்று வரலாம். ஏனெனில் காசி விஸ்வநாதர் ஆலயம் ஒரு அறிவுத் திருத்தலம் ஆகும். கல்வியும் ஞானமும் தரும் புண்ணிய ஸ்தலம் இது. காசிக்கு செல்பவர்கள் அங் குள்ள துண்டிவிநாயகரை வணங்கினால் தான் காசி யாத்திரையின் பலன் முழுமையாக கிடைக்கும் என கூறப்படுகிறது.

இவரது உருவ அமைப்பு சற்று மாறுபட்டு இருக்கும். முடிவடையாத சிலை போல, துண்டி விநாயகர் காட்சி தருகிறார். இங்கு வந்து கருமங் களை தொலைத்து விட்டு என்னை வணங்காமல் சென்றால் உங்கள் யாத்திரையின் பலனும் என்னைப் போல் அரைகுறையாகத் தான் இருக்கும் என்று சொல்லாமல் சொல்வதைப் போல இந்த விநாயகரின் வடிவமைப்பு அமைந்துள்ளது. எனவே காசிக்கு செல் பவர்கள் கண்டிப்பாக இந்த விநாயகரையும் வழிபட வேண்டும்



# பத்திரிகையாளர்களுக்கு மீண்டும் துரோகம்?

1986 முதல் செயல்படுத்தப்பட்டுவரும் இத்திட்டத்தின் கீழ் ஒரு மூத்த பத்திரிகையாளர் பயன் பெற வேண்டும் என்றால், “20 ஆண்டுகள் ஆசிரியர், உதவி ஆசிரியர், செய்தியாளர், புகைப்படக் கலைஞர் அல்லது பிழை திருத்துநர் பணியிடங்களில் அவர் பணிபுரிந்திருக்க வேண்டும். அவர்கள் பெற்ற மொத்த ஊதியம் எந்த ஆண்டிலும் ரூ. 2 லட்சத்தைத் தாண்டியிருக்கக் கூடாது.

அதாவது, மாதம் சுமார் ரூ. 16,700-க்கு அதிகமாகிவிடக் கூடாது. 58 வயது பூர்த்தியாகியிருக்க வேண்டும். ஓய்வூதியம் பெற விண்ணப்பிக்கும்போது குடும்பத்தின் மொத்த ஆண்டு வருமானம் ரூ. 72,000-க்கும் மேல் இருக்கக் கூடாது. பணிக்கொடையாகப் பெற்ற தொகை ரூ. 2 லட்சத்துக்கும் மேல் இருக்கக் கூடாது” என்று சொல்கிறது அரசின் விதிமுறை. இன்றைய விலைவாசியின் நிலை, ரூபாயின் உண்மையான மதிப்பு ஆகியவற்றோடு மத்திய - மாநில அரசு ஊழியர்கள் பெறும் ஊதியத்தோடு ஒப்பிட்டால், ஒரு துறையில் 20-30 ஆண்டுகள் பணியாற்றி 60 வயதில் ஓய்வுபெறும் ஒரு முதியவர், தன் வாழ்நாளில் ரூ.16,700-க்கு மேல் மாத ஊதியம் பெற்றிருக்கக் கூடாது என்பது எவ்வளவு நடைமுறைக்கு அப்பாற்பட்ட அபத்தமான விதி என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

அரசின் ஓய்வூதியத்தைப் பெறுவதற்காகவே காலமெல்லாம் நலிவுற்ற சூழலில் பத்திரிகையாளர்கள் இருக்க வேண்டும் என்பதைப் போல் அல்லவா இருக்கின்றன இந்த விதிகள்!

தன்னுடைய மூத்த குடிமக்கள் எவர்க்கும் அவர்களுடைய ஓய்வுக் காலத்தில் கண்ணியமான வாழ்வை உறுதிசெய்வது ஒரு மக்கள் நல அரசின் தார்மிகக் கடமை. பத்திரிகையாளர்கள் விஷயத்தில் ஏன் அரசு கூடுதல் கரிசனம் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது என்றால், அவர்களும் அரசு எனும் அமைப்புக்கு வெளியே இந்தச் சமூகத்தைத் தாங்கிப் பிடிக்கும் பணியில், மக்களின் குரலைப் பிரதிபலிக்கும் பணியில், ஒருவகையில் அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான பாலமாகத் தங்களை நிறுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான். உலகில் பத்திரிகையாளர்கள் பணியாற்ற ஆபத்தான நாடுகளின் பட்டியலில் இடம்பெற்றுள்ள நாடுகளில் ஒன்று இந்தியா.

அதிகாரத்தின் எவ்வளவோ அச்சுறுத்தல்களுக்கு இடையில் எந்தப் பாதுகாப்பும் அற்ற சூழலிலேயே பத்திரிகையாளர்கள் இங்கு பணியாற்றுகின்றனர். அதேசமயம், இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் பத்திரிகையாளர்களின் பணி அவர்களுடைய பணிக் காலத்தில் பொருளாதாரரீதியாகத் தங்களுக்கென பாதுகாப்பான ஒரு எதிர்காலத்தை வடிவமைத்துக் கொள்ளும் அளவுக்குப் பெரும்பான்மையானோருக்கு என்றைக்குமே இருந்ததில்லை.

இந்த இடத்தில்தான், காலமெல்லாம் சமூகத்துக்காக ஓடிய ஒரு பத்திரிகையாளர் தன் ஓய்வுக் காலத்தைக் கண்ணியமாகக் கழிப்பதற்கான சூழலை ஒரு அரசு உறுதிசெய்ய வேண்டிய கடமையும் அவசியமும் எழுகிறது.

தமிழ்நாட்டில் பத்திரிகையாளர்களுக்கு

மாநில அரசு அளிக்கும் மாதாந்திர ஓய்வுத் தொகையை ரூ.10,000 ஆக உயர்த்தி முதல்வர் பழனிசாமி அறிவித்திருக்கிறார். வரவேற்கத்தகுந்த அறிவிப்பு இது! ஆனால், ஓய்வுக்குப் பின் வறுமையில் வாடும் அவல நிலையிலிருந்து பத்திரிகையாளர்களை மீட்டு எடுக்க வேண்டும் என்ற அரசின் நோக்கம் உண்மையாகவே நிறைவேற வேண்டும் என்றால், இந்த ஓய்வுத் தொகையைப் பெறுவதற்காக வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகள், நிபந்தனைகளில் முக்கியமான சில மாற்றங்களை அரசு மேற்கொண்டாக வேண்டும்.

இந்த ஓய்வூதியம் வாங்குபவர்கள் என்று அரசு 163 பேரைக் குறிப்பிட்டிருக்கிறது. இந்த நிதியாண்டில் புதிதாக 20 பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படுகிறது என்று அரசு குறிப்பிடுகிறது. "இன்றைய நிலையில் தமிழகத்தில் பத்திரிகையாளர்கள் எண்ணிக்கை 10 ஆயிரத்தைத் தாண்டியிருக்கும். 60 வயதைக் கடந்த பத்திரிகையாளர்கள் எண்ணிக்கை ஆயிரத்திதுக்கும் அதிகமாக இருக்கும். அவர்களில் 90%-க்கும் கூடுதலானவர்கள் ஓய்வூதியம் தேவைப்படும் நிலையில்தான் உள்ளனர் எனும்போது, அவர்களில் 163 பேருக்கு மட்டுமே ஓய்வூதியம் என்பது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது" என்று பாமக நிறுவனர் ராமதாஸ் சுட்டிக்காட்டியிருப்பது இந்தத் திட்டத்தில் உள்ள போதாமையைத் தாண்டி, அது தன்னகத்தே கொண்டிருக்கும் சிக்கலையும் நாம் நெருக்கமாகப் பார்க்க வழிகாட்டுவதாகும்.

தமிழக அரசு இதை உணர்ந்திருப்பதாகவே தெரிகிறது. ஆனால், அரசின் நோக்கம் நிறைவேற வேண்டும் என்றால், அரசின் விதிகள் நடைமுறைச் சூழலுக்கு ஏற்ப மாற்றப்பட வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற ஒருவர் உண்மையாகவே பத்திரிகையாளர்தானா என்று உறுதி செய்துகொள்வதில் அரசு அக்கறை செலுத்தலாம். ஆனால், 20-30 ஆண்டுகள் பத்திரிகையாளர் பணியில் இருந்து ஒருவர் ஓய்வு பெற்றிருப்பது உறுதியாகத் தெரியும் நிலையில், ஒருவர் கூட இத்திட்டத்தின் பயனை இழக்கக் கூடாது. வருமானம் அல்ல; ஒருவர் ஆற்றியிருக்கும் பணியே தகுதி என்றாக வேண்டும். கருணையின் அடிப்படையில் அல்ல; தார்மிகக் கடமை எனும் அடிப்படையில் பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதிய விஷயத்தைத் தமிழக அரசு அணுக வேண்டும்!

தமிழ்நாட்டில் பத்திரிகையாளர்களுக்கு மாநில அரசு அளிக்கும் மாதாந்திர ஓய்வுத் தொகையை ரூ.10,000 ஆக உயர்த்தி முதல்வர் பழனிசாமி அறிவித்திருக்கிறார். வரவேற்கத்




தகுந்த அறிவிப்பு இது! ஆனால், ஓய்வுக்குப் பின் வறுமையில் வாடும் அவல நிலையிலிருந்து பத்திரிகையாளர்களை மீட்டு எடுக்க வேண்டும் என்ற அரசின் நோக்கம் உண்மையாகவே நிறை வேற வேண்டும் என்றால், இந்த ஓய்வுத் தொகை யைப் பெறுவதற்காக வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகள், நிபந்தனைகளில் முக்கியமான சில மாற்றங்களை அரசு மேற்கொண்டாக வேண்டும்.


இந்த ஓய்வூதியம் வாங்குபவர்கள் என்று அரசு 163 பேரைக் குறிப்பிட்டிருக்கிறது. இந்த நிதியாண்டில் புதிதாக 20 பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படுகிறது என்று அரசு குறிப்பிடுகிறது. "இன்றைய நிலையில் தமிழகத்தில் பத்திரிகை யாளர்கள் எண்ணிக்கை 10 ஆயிரத்தைத் தாண்டி யிருக்கும். 60 வயதைக் கடந்த பத்திரிகையாளர்கள் எண்ணிக்கை ஆயிரத்திதுக்கும் அதிகமாக இருக் கும். அவர்களில் 90%-க்கும் கூடுதலானவர்கள் ஓய்வூதியம் தேவைப்படும் நிலையில்தான் உள்ளனர் எனும்போது, அவர்களில் 163 பேருக்கு மட்டுமே ஓய்வூதியம் என்பது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது" என்று பாமக நிறுவனர் ராமதாஸ் சுட்டிக்காட்டியிருப்பது இந்தத் திட்டத்தில் உள்ள போதாமையைத் தாண்டி, அது தன்னகத்தே கொண்டிருக்கும் சிக்கலையும் நாம் நெருக்கமாகப் பார்க்க வழிகாட்டுவதாகும்.

தமிழக அரசு இதை உணர்ந்திருப்பதாகவே தெரிகிறது. ஆனால், அரசின் நோக்கம் நிறைவேற வேண்டும் என்றால், அரசின் விதிகள் நடை முறைச் சூழலுக்கு ஏற்ப மாற்றப்பட வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற ஒருவர் உண்மையாகவே பத்திரிகையாளர்தானா என்று உறுதிசெய்துகொள்வதில் அரசு அக்கறை செலுத் தலாம். ஆனால், 20-30 ஆண்டுகள் பத்திரிகை யாளர் பணியில் இருந்து ஒருவர் ஓய்வு பெற் றிருப்பது உறுதியாகத் தெரியும் நிலையில், ஒருவர்கூட இத்திட்டத்தின் பயனை இழக்கக் கூடாது. வருமானம் அல்ல; ஒருவர் ஆற்றியிருக் கும் பணியே தகுதி என்றாக வேண்டும். கருணை யின் அடிப்படையில் அல்ல; தார்மிகக் கடமை எனும் அடிப்படையில் பத்திரிகையாளர்களுக் கான ஓய்வூதிய விஷயத்தைத் தமிழக அரசு அணுக வேண்டும்!

இதைவிடுத்த வெற்றி அறிக்கைகள் மூலம் பத்திரிகையாளர்களை திருப்திப்படுத்தி விட லாம் என்ற எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண் டும். இதைபோல் பச்சை துரோகத்தை இனியும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று பத்திரிகை யாளர்களின் ஒருமித்த குரலாக எழுந்துள்ளது.

– குருதேவ்





Happy
Independence Day

# இனிய சுதந்திர தின வாழ்த்துகள்..!

ஒன்று சேர்வோம் ..!

ஒதுக்குவோம் பகைமையை ..!

ஒருமித்த இலக்கோடு உருவாக்குவோம் ..!

வளமான இந்தியாவை நினைவில் கொள்வோம் ..!

இன்றைய நம் சுதந்திர சுவாசம் ..!

அன்றைய சுதந்திரப் போராட்ட வீரர்களின்

தன்னலமற்ற தியாகம் ..!

நாளைய இந்தியா நலமாய் நம் கையில்...



**A. பாலகிருஷ்ணன்**
தலைவர்




**K. செந்தில்குமார்**
செயலாளர்



**P. கனகராஜ்**
பொருளாளர்

தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம், கோவை மாவட்டம்

# இனிய சுதந்திர தின வாழ்த்துகள்..!



மந்திரத்தாலும்
தந்திரத்தாலும்
பெற்றதல்ல
எங்கள் சுதந்திரம்...!

உதிரத்தாலும்,
உயிர் தியாகத்தாலும்
கிடைத்தது
எங்கள் சுதந்திரம்..!!



**N.P. பிரதீப்**
தலைவர்



**S. ராம்குமார்**
செயலாளர்



**M. ராஜா**
பொருளாளர்

**தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம், சேலம் மாவட்டம்**



# இனிமே விவசாயம் அவ்வளவுதான்...?

பொதுவாக விவசாயம் ஆண்டுக்கு ஒருமுறை முதல் போட்டு முதல் எடுக்கும் தொழில். ஒரு விவசாயி தன் ஆயுட் காலத்தில் நாற்பது முறை முதல் போட்டு, அவருக்கு அதிர்ஷ்டம் இருந்தால், இருபது முறை முதல் எடுக்கலாம். இந்த வேறுபாடுகளை நிபுணர்கள் கவனிக்க வேண்டும். இரண்டு ஆண்டுகளாக முதல் போடவே முடியாத, அல்லது போட்ட முதலை இழந்த நிலையில் தான் இன்றைய விவசாயிகள் இருக்கிறார்கள். ஐந்து ஏக்கர் வைத்திருக்கும் ஒருவர் ஆண்டுக்கு நூற்றைம்பது மூட்டை அரசாங்கத்துக்கு நெல் அளந்தால் அது லாப நோக்கில் நடக்கும் வியாபாரமல்ல. சமுதாயத்துக்கு அவர் செய்யும் பங்களிப்பு அது. தலைமுறை தலைமுறைகளாக எத்தனை ஆண்டுகள் இது நடந்திருக்கும்! அரசாங்கம் இதனை ஒருவகையாகப் பார்த்துக் கொள்முதல் நிலையங்களில் வாங்கிக்கொள் கிறது. 'கொள்முதல்' என்பது வியாபாரத்தில் புழங்கும் சொல். விவசாயிகளின் சமுதாயப் பங்களிப்புக்கு உரிய அங்கீகாரம் அதுவல்ல.

விவசாயம் வறுமையைத் தள்ளிப்போடும், வசதியைக் கொண்டுவராது. யதார்த்தம் இதுதான். நமக்குக் கசந்துபோவதும், அதுவே கதைகளில் வரும்போது ருசிப்பதும் ஒரு உளவியல் புதிர். மற்ற பிரச்சினைகளைப் போன்று விவசாயிகளின் பிரச்சினைகளுக்கும் தொழில்நுட்பத் தீர்வு உண்டு என்று நம்பும் நிபுணர்களுக்கு இப்படி ஒரு புதிர் புலப்படுவதே இல்லை. விவசாயம் நல்ல வருமானம் தரா விட்டால் விவசாயிகள் அதை எப்போதே விட்டிருப்பார்களே என்று பேசுவார்கள்.

ஒரு ஏக்கருக்கு நெல் என்ன கண்டு முதலா கிறது என்று ஒரு பொருளாதார நிபுணர் கேட் டார். சில ஆண்டுகளில் முப்பது மூட்டை வரை கண்டுள்ளது என்றேன். விவசாயத்தில் லாப மில்லையென்றால் நான் நம்ப மாட்டேன் என்பதுபோல் என்னைப் பார்த்தார். நான்கு தலைமுறைகள் நல்ல விவசாயம் செய்தும், வாய்க்கும் கைக்குமாகப் பிழைத்துக் கொண்டி ருந்த குடும்பங்களை அறிவேன். அலுவலக வேலை ஒன்றில் சேர்ந்து தன் ஆயுட்காலத் திலேயே குடும்பத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்தவர்களையும் அறிவேன்.

நகர்ப்புறங்களில் சராசரி வசதியைக் கொண்ட குடும்பத்துக்குக் கிடைக்கும் கல்வியும், மருத்துவ வசதியும் விவசாயிகளுக்கும் கிடைக்கு மானால் அது அவர்களின் பங்களிப்புக்குக் கிடைக்கும் சமுதாய அங்கீகாரம். இதையெல் லாம் பெற்றுக்கொள்வது உன் பொறுப்பு என்று வல்லுநர்கள் விவசாயிகளை விட்டுவிடுவதுதான் நடப்பு. இந்த அணுகுமுறையின் அடிப்படை யான கருத்தாக்கத்தைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

திட்டங்களை வகுக்கும் நிபுணர்கள் சொட்டு நீர்ப் பாசனம், குழாய்ப் பதிப்பு என்று பரிந் துரைப்பார்கள். நீர் சிக்கனம் என்பது காவிரிப்

படுகையின் மண்வாகுக்கு ஒத்துவருவதல்ல. எந்தப் பிரச்சினையானாலும் அதற்கு ஒரு தொழில் நுட்பத் தீர்வு உண்டு என்ற அடிப் படையில் சிந்திப்பது அறிவியலின் ஒரு மூட நம்பிக்கை. காவிரிப் படுகையால் உருவானதல்ல, இங்குள்ள பாசன முறை. அப்போதைய பாசன முறையால் உருவானதுதான் காவிரிப் படுகையே! கூட்டுப் பண்ணை, நீர் சிக்கனம் போன்ற திட்டங்கள் நவீனக் கருவிகளுக்குப் பிணைக் கைதிபோல் பெரும் நுகர்வோர் சந்தையாகக் காவிரிப் படுகையை மாற்றத்தான் உதவும்.


மூன்று யதார்த்தங்களைக் கவனிக்க வேண் டும். காவிரியில் இனி வெள்ளப் பெருக்கின் போதுதான் தண்ணீர் வரும் என்பது ஒன்று. நடுவர்மன்றத் தீர்ப்பினை கர்நாடகம் அப்படியே ஏற்றுக்கொள்ளாது.

இரண்டாவது யதார்த்தம், நீதிமன்றத் தீர்ப்பை நிறைவேற்றிக்கொள்வது எளிதல்ல என்பது. அரசுகளின் அதிகாரப் பசியில் நியாயங்கள் மறந்துபோகும். தீர்ப்புகளெல்லாம் தீர்வாகாது.

மூன்றாவதாக, அரசியல் தீர்வு என்பதை இரு பக்கத்து அரசியல்வாதிகளும் அனுமதிக்க மாட்டார்கள். இரண்டு மாநிலங்களுமே தங்கள் நிலைமைக்கு மூன்றாமவராக அவர்கள் காணும் மத்திய அரசே காரணம் என்று சொல்ல இயலும் என்பதும் பிரச்சினையின் ஒரு அம்சம். விவசாயிகள் பருமழைக்கு ஏற்ற விவசா யத்துக்கு, மேட்டூர் அணைக்கு முன்பிருந்த விவசாயத்துக்கு, திரும்ப வேண்டும்.

பருவ மழையை மையமாக வைத்து, காவிரி நீரைத் துணை ஆதாரமாகக் கொண்டு விவசா யத்தை மறுகட்டமைப்புச் செய்ய வேண்டும். இடுபொருள் செலவுகளைக் கணக்கிட்டு அதற்கு ஒரு வீதம் கூடுதலாக இருக்குமாறு அரசாங்கம் விளைபொருளுக்கு விலை நிர்ணயிப்பது தவறான கருத்தாக்கத்தின் விளைவு. சமுதாயத் துக்கு உன்னதமான பங்களிப்புச் செய்துவரும் விவசாயிகளின் வாழ்க்கைத்தரமும் மற்றவர் களுக்குச் சமமாக இருக்க வேண்டும். விவசாயி கள் தங்களுக்குச் சொர்க்கத்தைக் கேட்கவில்லை, கண்ணியமான ஒரு வாழ்க்கையைத்தான் கேட் கிறார்கள் என்பதை அரசுகள் உணர வேண்டும்!

– அகிலாண்டஈஸ்வரி


ஏக்கத்திலும், தூக்கத்திலும் விழித்ததல்ல எங்கள் சுதந்திரம்;
கவி ஏற்றத்திலும், கனவு மாற்றத்திலும் விடிந்தது எங்கள் சுதந்திரம்;




**M. சரவணன்**
பொருளாளர்



**K. வேலியப்பன்**
மாவட்ட உறுப்பினர்

தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம், விழுப்புரம் மாவட்டம்



# ஏனோ மறந்து விட்டார்கள்..!

ஏர் ஓட்டின வயலிலே...
தார் ஓட்டும் காலமிது...!
நஞ்சை காட்டின் நெஞ்சினிலே..!
நஞ்சு விதைக்கு நேரமிது..!
இயற்கையின் கழுத்தினை
இரத்தம் சொட்ட அறுத் தெரியும்
அரக்கர்கள் வாழும் தேசமிது..!
இது தினமும்
நடக்கும் காலக்கூத்து..!
இதையெல்லாம் பார்த்து
மன்னன் மகுடம் சிரிப்பாய் சிரிக்குது..!
கடமையை செய்ய கையூட்டுக் கேக்குது!
உலகமே உள்ளங்கையில் வந்தாச்சு...
உணவை மட்டும் உழவனால் தான்
கொண்டு வர  முடியும் என்று
ஏனோ மறந்தாச்சு...!
இனியாவது ஒரு விதி செய்வோம்.!

- ம. நிவேதிதா

# இனிய சுதந்திர தின வாழ்த்துகள்..!



முன்னோர்கள் போராடி
பெற்று தந்த சுதந்திரம்...!

அண்ணல் காந்தி அகிம்சை வழியில்
கிடைக்கப் பெற்ற சுதந்திரம்...!

அனைவரிடத்திலும் அன்பாக இருப்போம்...
பெற்ற சுதந்திரத்தை
பண்போடு பாதுகாப்போம்...!

அன்புடன்

**C. தனராஜி,** B.A.,B.Ed.,
அரசினர் மாணவர் விடுதி MBC
நல்லவன் பாளையம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

# இனிய சுதந்திர தின வாழ்த்துகள்..!

ஆட்டத்திலும், பாட்டத்திலும்
பிறந்ததில்லை எங்கள் சுதந்திரம் ..!
உயிர் ஓட்டத்திலும், விடும் மூச்சினிலும்
பறக்குது பார் எங்கள் சுதந்திரம் - விண்ணில்
பறக்குது பார் எங்கள் சுதந்திரம்..!!



**K. மணிவண்ணன்**
மாவட்ட புகைப்படக் கலைஞர்



**H. சிவராமன்**
மாவட்ட துணை செயலாளர்




தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்,
காஞ்சிபுரம் மாவட்டம்


கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே.


MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed, at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. A. Mouriyan,


சுதந்திர தின நல்வாழ்த்துகள்...
அகன்றது
அன்னியரின் தந்திரம்!
அல்லல்பட்டு
கிடைத்ததே சுதந்திரம்!!
இனமொழி கடந்து
இதை நேசிப்போம்!
சுதந்திர காற்றை
சுவாசிப்போம்!!
பாபு தங்கவேல்
திரைப்பட தயாரிப்பாளர்
விஷ்ணுமாயா புரொடக்‌ஷன்ஸ்
வளசரவாக்கம், சென்னை.


MAKKAL VISARANAI Tamil Monthly
Registered with Registrar of News Paper for India Under No.
மக்கள் விசாரணை
WEB TV
www.makkalvisaranai.com
இணையதள தொலைக்காட்சி
உதயம்
சமூகம், அரசியல், புலனாய்வு
செய்திகளை துரிதமாக தெரிந்துகொள்ள
எமது இணைய தொலைக்காட்சியை
பாருங்கள்..!
தொடர்புக்கு : 93821 33334, 7904250554
mail : news@makkalvisaranai.com
Makkal Visaranai
news LIVE